தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புரட்டாசி 1. பிரஜோற்பத்தி-திருவள்ளுவர் ஆண்டு–2022.

1991, செப்டம்பர் 17, செவ்வாய்க்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழ்இ நிற்கும் உலகு.''

குடிகளை அன்போடு அணைத்துக் கொண்டு செங்கோல் செலுத்துகிற அரசனுடைய அடியைப் பின்பற்றியே சென்று கொண்டிருக்கும் இவ்வுலகம்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

வினாக்கள்—விடைகள். வினா எண் 40— திரு. கே. தவசி.
மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

40—

ஆண்டிப்பட்டியில் நடுவர் நீதிமன்றம்.

*789— திரு. கே. தவசி:
மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆண்டிப்பட்டி மற்றும் கண்டமனூர் காவல் துறை சரகங்களைச் சேர்ந்த வழக்குகளை விசாரிப்பதற்கு நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1 உசிலம்பட்டியில் அமைக்கப்பட்டுள்ளதை ஆண்டிப்பட்டிக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) தாலுகாவிற்கு ஒரு உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் திட்டப்படி ஆண்டிப்பட்டி தாலுகாவுக்கென ஆண்டிப்பட்டியில் நீதிமன்றம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு சே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) உயர்நீதிமன்றத்தின் கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

திரு. கே. தவசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நமது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆண்டிப்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு தாலுகா அலுவலகம் ஏற்படுத்தினார்கள். அதேபோல் உரிமையியல் நீதிமன்றமும், குற்றவியல் நீதிமன்றமும் வேண்டுமென்ற அடிப்படையில் அங்கே இரண்டு நீதிமன்றங்கள் ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலையில் தற்போது உசிலம்பட்டியில் அந்த ஆண்டிப்பட்டி வழக்குகளை விசாரிக்கிற கோர்ட்டும் வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவருகிறது. எனவே அந்தக் கட்டிடத்தை ஆண்டிப்பட்டியில் மாற்றி அங்கே முதல் வகுப்பு நடுவர் நீதிமன்றம் அமைக்கப்படுமா என்பதை நான் அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டியில் 3 நீதிமன்றங்கள் இருக்கின்றன. அதில் ஒன்றை உத்தமபாளையத்திற்கு மாற்ற முடிவெடுக்கப்பட்டுள்ளது. உசிலம்பட்டியில் ஏராளமான வழக்குகள் இருக்கின்ற காரணத்தால், இரண்டு நீதிமன்றங்கள் அங்கே தேவைப்படுகின்றன. ஆனால் ஆண்டிப்பட்டியிலும் ஒரு நீதிமன்றம் தேவைப்படுகிறது. அதை முன்னிட்டு எங்களுடைய இனிய தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் உயர்நீதிமன்றத்திற்கு எழுதி இருக்கிறோம். அதைத் துரிதப்படுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசும் முயன்று கொண்டிருக்கிறது.

திரு. கே. தவசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுகாவிற்கு ஒரு உரிமையியல் நீதிமன்றம் என்ற அடிப்படையில் ஆண்டிப்பட்டிக்கும் உரிமையியல் நீதிமன்றம் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகத் தெளிவாக என்னுடைய விடையிலே கருத்தைத் தெரிவித்து இருக்கிறேன். உயர்நீதிமன்றத்திற்கு வற்புறுத்திச் சொல்லி இருக்கிறோம். நிச்சயமாக விரைவில் ஆண்டிப்பட்டியில் ஒரு நீதிமன்றம் அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 41. திரு. காஞ்சி பன்னீர்செல்வம். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

41-- உத்திரமேரூரில் துணை நீதிமன்றம்.

*1757— திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

உத்திரமேரூரில் துணை நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?